**செய்தி வெளியீடு எண்: 941** **நாள்: 19.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

## ‘‘ஜியோ சிந்தடிக்ஸ்’’ – ஒரு நாள் கருத்தரங்கு

தமிழ்நாடு, ஜவுளித் தொழிலில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. ஜவுளித் தொழிலின் உட்பிரிவுகளான நூற்பு, கைத்தறி, விசைத்தறி, பின்னலாடை, ஆயத்த ஆடை உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

ஜவுளித் தொழிலில், ‘‘தொழில்நுட்ப ஜவுளி’’ (Technical Textiles) பிரிவு வேகமாக வளர்ந்து வரும் ஒரு புதிய தனிப் பிரிவாகும். தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவின் முக்கியத்துவத்தினை கருத்திற் கொண்டும், அப்பிரிவு மேலும் வளர்ச்சியடைவதற்கும், தொழில் முனைவோர்களுக்கும், தொழில்நுட்ப ஜவுளியின் பயன்பாட்டாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாநில அரசால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இப்பிரிவின் வளர்ச்சிக்கென முதற்கட்டமாக 2017–18 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் கோயம்புத்தூரிலுள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் பன்னாட்டு ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரியுடன் இணைந்து தொழில்நுட்ப ஜவுளியின் உட்பிரிவுகளான இண்டஸ்ட்ரியல் டெக்ஸ்டைல்ஸ், அக்ரோ டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் மெடிக்கல் டெக்ஸ்டைல்ஸ் பிரிவுகள் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், கள ஆய்வு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக 2018–19 ஆம் ஆண்டில் மேலும் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ஜவுளியின் உட்பிரிவுகளில் ஒன்றான ஜியோ–சிந்தடிக்ஸ் ஜவுளிகளின் பயன்பாடு உட்கட்டமைப்பு, கட்டுமானம், உள் அலங்கார வேலைப்பாடு, கூரை அமைத்தல் போன்ற பணிகளில் மிக அதிகமாக உள்ளதுடன், இப்பிரிவின் தொழில் வளர்ச்சி வாய்ப்புகளும் பிரகாசமாக உள்ளதாகவும், இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் துறைக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதனடிப்படையில், ஜியோ–சிந்தடிக்ஸ் ஜவுளிகளின் பயன்பாடுகள் குறித்தும் அப்பிரிவின் தொழில் வளர்ச்சி குறித்தும் ஜவுளித் துறையினருக்கும், கட்டுமான துறையினருக்கும், கட்டுமான துறையை சார்ந்த அரசு நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்கு நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசின் கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் சர்தார் வல்லபாய் பட்டேல் பன்னாட்டு ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரியுடன்

இணைந்து ஜியோ–சிந்தடிக்ஸ் தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கு **19.12.2018** அன்று சென்னை, எழும்பூரில் உள்ள ஹோட்டல் அம்பாசடர் பல்லவாவில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கினை கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் அரசு முதன்மைச் செயலர், **திரு குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள்** துவக்கி வைத்தார்கள். கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் **திரு ச.முனியநாதன், இ.ஆ.ப., அவர்கள்,** கைத்தறி மற்றும் துணிநூல் துறை கூடுதல் இயக்குநர் திரு க.கர்ணன் அவர்கள் மற்றும் சர்தார் வல்லபாய் பட்டேல் பன்னாட்டு ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் இயக்குநர், டாக்டர் சி.ரமேஷ்குமார் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜியோ–சிந்தடிக்ஸ் ஜவுளிப் பிரிவில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஆராய்ச்சி நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், உயர் கல்வி நிறுவனங்கள், மும்பை டெக்ஸ்டைல்ஸ் ரிசர்ச் அசோசியேஷன், இந்திய சணல் ஆராய்ச்சி சங்கம் மற்றும் ஐ.ஐ.டி., டெல்லி, ஆகியவற்றின் கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களால் ஜியோ–சிந்தடிக்ஸ் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து தொழில்நுட்ப மற்றும் பயன்பாட்டு கருத்துகள் விளக்கி கூறப்பட்டது. மேலும், தொழில்நுட்ப ஜவுளி பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளும் விதமாக, இக்கருத்தரங்கில் தொழில்நுட்ப ஜவுளி இரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இக்கருத்தரங்கில் கட்டுமான துறை சார்ந்த அரசு நிறுவனங்களான பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, பேரூராட்சிகள் துறை, ஊரக வளர்ச்சித் துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மீன்வளத்துறை (பொறியியல் பிரிவு), தமிழ்நாடு குடிநீர் வாரியம், அண்ணா பல்கலைகழகம் மற்றும் கட்டுமான தொழில் சார்ந்த சங்கங்கள், நிறுவனங்கள், ஜவுளித் தொழில் சங்கங்கள், தொழில் முனைவோர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஜியோ–சிந்தடிக்ஸ் ஜவுளிகளின் பயன்பாடு மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து விரிவாக அறிந்து பயன்பெற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**